# ஸ்டெர்லைட் போராட்டம் தொடர்பாக புதிய சம்மன்கள் அனுப்ப உயர்நீதிமன்றம் தடை

**மதுரை, மே 22:** தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டம் தொடர்பாக 107, 111 ஆகிய பிரிவுகளின் கீழ் புதிய சம்மன்கள் அனுப்பத் தடைவிதித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடியைச் சேர்ந்த மோகன் தாக்கல் செய்த மனு: தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நீண்ட காலமாக மக்கள் போராடி வருகிறார்கள். 2018 மே 22-இல் நடைபெற்ற போராட்டத்தில், நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்தனர். போராட்டத்தில் காயமடைந்த 200 பேரில் பலர் தற்போதும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இந்த வழக்கின் விசாரணையை சிபிஐ 4 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என 2018 ஆகஸ்ட் 14-இல் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டது. ஆனால், சிபிஐ இதுவரை பெயரைக் குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்த அனுமதி கோரி உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் தூத்துக்குடி பெல் ஹோட்டலில் மே 22 -ஆம் தேதி காலை 9 மணி முதல் 11 மணி வரை நினைவஞ்சலி கூட்டம் நடத்தவும், அதில் 500 பேர் பங்கேற்கவும் அனுமதி வழங்கினர்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரும், துணை ஆட்சியரும் 107, 111 ஆகிய பிரிவுகளின் கீழ் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் சிலருக்கும், போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கும் சம்மன் அனுப்பி விசாரணைக்கு ஆஜராகுமாறு கூறியுள்ளனர். மேலும், சிலரிடம் ஒன்றரை லட்சம் மதிப்புள்ள உறுதி மொழிப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறும் தெரிவித்துள்ளனர். இதுபோன்று சம்மன் அனுப்பி பொதுமக்களை தொந்தரவு செய்வது சட்டவிரோதமானது . ஆகவே தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்டெர்லைட் போராட்டக்காரர்கள் மீது 107 மற்றும் 111 ஆகிய பிரிவுகளின் கீழ் அனுப்பப்பட்ட சம்மன்கள் மீது நடவடிக்கை எடுக்க தடை விதிப்பதோடு, விசாரணை என்ற பெயரில் துன்புறுத்துவற்கும் தடை விதிக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், ஹேமலதா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம் என்பதே தமிழக அரசின் கொள்கை முடிவாக இருக்கும் நிலையில், அதே கருத்து கொண்டோரை துன்புறுத்துவது ஏன்? அரசின் நோக்கம் மக்களை பாதுகாப்பதா? துன்புறுத்துவதா? எனக் கேள்வி எழுப்பினர். தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டம் தொடர்பாக 107 மற்றும் 111 ஆகிய பிரிவுகளின் கீழ் அனுப்பப்பட்ட சம்மன்களில் இறுதி முடிவெடுப்பதற்கும், இந்த பிரிவுகளின் கீழ் புதிய சம்மன்களை அனுப்புவதற்கும் தடைவிதித்து உத்தரவிட்டனர். மேலும் வழக்கு விசாரணையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

தினமணி Thu, 23 May 2019
https://epaper.dinamani.com/c/39659745